ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ரு'தி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பாலனாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பாலனாய் ॥

## தலைமகள் நிலைகண்டு தாய் இரங்கல்

‡பாலனாய்⋆ ஏழ் உலகுண்டு பரிவின்றி⋆
ஆல் இலை⋆ அன்ன வசம் செய்யும் அண்ணலார்⋆
தாள் இணைமேல் அணி⋆ தண்ணந் துழாய் என்றே
மாலுமால்⋆ வல்வினையேன்⋆ மட வல்லியே (1)

வல்லி சேர் நுண்ணிடை⋆ ஆய்ச்சியர் தம்மொடும்⋆
கொல்லைமை செய்து⋆ குரவை பிணைந்தவர்⋆
நல் அடிமேல் அணி⋆ நாறு துழாய் என்றே
சொல்லுமால்⋆ சூழ் வினையாட்டியேன்⋆ பாவையே (2)

பாவியல் வேத⋆ நன்மாலை பல கொண்டு⋆
தேவர்கள் மா முனிவர்⋆ இறைஞ்ச நின்ற⋆
சேவடி மேல் அணி⋆ செம் பொன் துழாய் என்றே
கூவுமால்⋆ கோள் வினை ஆட்டியேன்⋆ கோதையே (3)

கோதில வண் புகழ்⋆ கொண்டு சமயிகள்⋆
பேதங்கள் சொல்லிப்⋆ பிதற்றும் பிரான் பரன்⋆
பாதங்கள் மேல் அணி⋆ பைம் பொன் துழாய் என்றே
ஓதுமால்⋆ ஊழ்வினையேன்⋆ தடந் தோளியே (4)

தோளி சேர் பின்னை பொருட்டு⋆ எருதேழ் தழீ இக்-
கோளியார்⋆ கோவலனார்⋆ குடக் கூத்தனார்⋆
தாள் இணை மேல் அணி⋆ தண்ணந் துழாய் என்றே
நாளு நாள்⋆ நைகின்றதால்⋆ என்தன் மாதரே (5)

மாதர் மா மண்மடந்தை பொருட்டு⋆ ஏனம் ஆய்⋆
ஆதியங்காலத்து⋆ அகல் இடம் கீண்டவர்⋆
பாதங்கள் மேல் அணி⋆ பைம் பொன் துழாய் என்றே
ஓதும்மால்⋆ எய்தினள்⋆ என்தன் மடந்தையே (6)

www.prapatti.com

மடந்தையை⋆ வண் கமலத் திருமாதினை⋆
    தடம் கொள் தார் மார்பினில்⋆ வைத்தவர் தாளின்மேல்⋆
வடம் கொள் பூம் தண்ணந் துழாய் மலர்க்கே⋆ இவள்
    மடங்குமால்⋆ வாணுதலீர்!⋆ என் மடக்கொம்பே (7)

கொம்பு போல் சீதை பொருட்டு⋆ இலங்கை நகர்⋆
    அம்பெரி உய்த்தவர்⋆ தாள் இணைமேல் அணி⋆
வம்பவிழ் தண்ணந் துழாய் மலர்க்கே⋆ இவள்
    நம்புமால்⋆ நான் இதற்கென் செய்கேன்⋆ நங்கைமீர்! (8)

நங்கைமீர்! நீரும்⋆ ஓர் பெண் பெற்று நல்கினீர்⋆
    எங்ஙனே சொல்லுகேன்⋆ யான் பெற்ற ஏழையை⋆
சங்கென்னும் சக்கரம் என்னும்⋆ துழாய் என்னும்⋆
    இங்ஙனே சொல்லும்⋆ இராப் பகல் என் செய்கேன் (9)

என் செய்கேன் என்னுடைப் பேதை⋆ என் கோமளம்⋆
    என் சொல்லும்⋆ என் வசமும் அல்லள் நங்கைமீர்⋆
மின் செய் பூண் மார்பினன்⋆ கண்ணன் கழல் துழாய்⋆
    பொன் செய் பூண் மென் முலைக்கென்று⋆ மெலியுமே (10)

‡மெலியும் நோய் தீர்க்கும்⋆ நம் கண்ணன் கழல்கள்மேல்⋆
    மலி புகழ் வண் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
ஒலி புகழ் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
    மலி புகழ் வானவர்க்காவர்⋆ நற்கோவையே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com